கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக்கலைமாணித் தேர்வு – 2016/2017 (யூன் 2019)

# HCS 4133 The Saiva Siddhanta

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**பகுதி–I** இல் இருந்து இரண்டு வினாக்களையும் **பகுதி–II** இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி – I

01. சைவசித்தாந்த மெய்யியலில் மேல்வருவன பெறும் முக்கியத்துவத்தினை ஆராய்க.
    (அ) அறிவாராய்ச்சியியல் (07 புள்ளிகள்)
    (ஆ) உளவியல் (07 புள்ளிகள்)

02. சைவசித்தாந்தத்தில் "கடவுள்" என்ற எண்ணக்கருவை பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.
    (அ) இறை இருப்பினை நிறுவுதல் (06 புள்ளிகள்)
    (ஆ) பதி இலக்கணம் (08 புள்ளிகள்)

03. மேல்வரும் அறிஞர்களுள் யாரேனும் இருவர் ஈழத்துச் சைவசித்தாந்த, வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக.
    (அ) காசிவாசி செந்திநாதையர் (07 புள்ளிகள்)
    (ஆ) சைவப்புலவர் கா.அருணாசலதேசிகர் (07 புள்ளிகள்)
    (இ) பண்டிதர் மு.கந்தையா (07 புள்ளிகள்)

## பகுதி – II

04. "தமிழ் மக்களின் நுண்ணறிவின் மிகத்தேர்ந்த படைப்பு சைவசித்தாந்தம்" என்ற G.U.போப்பையருடைய கருத்தினை தெளிவுபடுத்துக.
(24 புள்ளிகள்)

05. "ஆன்ம இருப்புத் தொடர்பாகச் சைவசித்தாந்திகள் முன்வைக்கும் கருத்துக்கள் தர்க்க ரீதியானவை" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுக.
(24 புள்ளிகள்)

06. "மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கினுள் முதன் நூலாகக் கருதப்படுவது சிவஞானபோதமாகும்." இதற்கான காரணங்களை ஆராய்க.
(24 புள்ளிகள்)

07. "ஆணவ மலம் செம்பிற் களிம்பு போலவும் நெல்லிற்கு உமி போலவும் அனாதியே உயிர்கட்கு இயற்கைக் குற்றமாய் அமைந்துள்ளது." இக்கூற்றினை ஏற்றுக்கொள்வீரா? காரணம் தந்து விளக்குக.
(24 புள்ளிகள்)

*****